பக்கங்கள்:-18+02

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 15 | ஞாயிற்றுக்கிழமை | 29.06.2025 | அதிர்வு 330

## சர்வதேச பங்களிப்பை வலியுறுத்த வேண்டும் ஐ.நா. ஆணையாளர்

### சுமந்திரன் விடாப்பிடி



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின்

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணிப் புதைகுழியில் 'யுனிசெவ்' புத்தகப் பை மீட்பு

## இதுவரை 33 மனித என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் இன்றைய அகழ்வின் போது மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் என்புத் தொகுதி ஒன்றுக்கு அருகில் ஆடை, கண்ணாடி வளையல் மற்றும் 'யுனிசெவ்' எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப் புத்தகப் பை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

06







# வாகன விபத்துக்களில் ஐவர் பரிதாப மரணம்!

(க.மகாதேவன்)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்ற வாகன விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

நுரைச்சோலை, வெல்லவாய, ஹோமாகம மற்றும் கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுகளில் நேற்று இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி – கற்பிட்டி வீதியில் தலுவ 6 ஆவது மைல்கல் பகுதியில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தனியார் பஸ் ஒன்று வீதியின் இடது பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது, பஸ்ஸில் இருந்த இருவர் பஸ்ஸில் இருந்து இறங்கி பஸ்ஸின் பின்னால் காத்திருந்த நிலையில், பாலாவி திசையில் இருந்து கற்பிட்டு திசை நோக்கிச் சென்ற லொறி ஒன்று இருவர் மீதும் பஸ் மீதும் மோதியது. இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்கள் 15 மற்றும் 74 வயதான ஜா-எல மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனகராயன்குளம் பொலிஸ் பிரிவில் ஏ – 9 வீதியில் புதுக்குளம் சந்தி பகுதியில் பயணித்த ஓட்டோ திடீரென வீதியின் வலது புறம் திரும்பிய போது, அதே திசையில் பயணித்த பஸ்ஸுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் ஓட்டோ சாரதியும் அதில் பயணித்த இரண்டு பயணிகளும் படுகாயமடைந்து, கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.உயிரிழந்தவர் நெடுங்கேணியைச் சேர்ந்த 46 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லவாய பொலிஸ் பிரிவின் எல்ல-வெல்லவாய வீதியில் 6 ஆவது மைல்கல் பகுதியில் லொறி ஒன்று வளைவில் பயணித்துக் கொண்டிருந்த போது, பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது. விபத்தில் லொறியின் சாரதி படுகாயமடைந்து வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் பண்டாரவளை, துங்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோமாகம பொலிஸ் பிரிவின் ஹைலெவல் வீதியில் உள்ள பிடிபன சந்தியில், பஸ் ஒன்று, கிளை வீதியில் இருந்துஹைலெவல்வீதிக்குள்நுழைந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர், ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மாவத்கம, ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 45 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச பங்களிப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்புக்கூறல் நிலைவரம் குறித்து உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் வெளியிடவிருக்கும் அறிக்கை மிகக் காத்திரமானதாக அமைய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், அவ்வறிக்கையில் இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகள் ஊடாக எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை என்ற விடயமும், ஆகையினால் அதில் சர்வதேசத்தின் பங்கேற்பு அவசியம் என்ற வலியுறுத்தலும் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை நாட்டுக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பிரதம நீதியரசர், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியதுடன் திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்து, அங்கும் பல தரப்பட்ட குழுக்களை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதுமாத்திரமன்றி விஜயத்தின்நிறைவு நாளன்று கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில், சர்வதேசத்தின் ஆதரவுடன் உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் வெளியிடவிருக்கும் அறிக்கை மிகக் காத்திரமானதாக அமைய வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

"முதன்முதலாக 2012 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறுதான் கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், உள்ளகப் பொறிமுறை ஊடாக எதனையும் செய்யமுடியாது என்பதைப் பேரவை புரிந்துகொண்டது. அதனையடுத்து 2014 ஆம் ஆண்டிலேயே இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு இலங்கை அரசின் அனுசரணையுடன் பேரவையின் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே நாட்டில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டது.

அதன் விசாரணை செயன்முறைகளில் சர்வதேசத்தின் பங்கேற்பை உள்வாங்கக்கூடிய வகையிலேயே அதற்குரிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் அலுவலகச் செயன்முறைகளில் சர்வதேசத்தின் பங்களிப்பை உள்வாங்குவதற்கு எந்தவொரு அரசும் இடமளிக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் உள்ளகப் பொறிமுறை ஊடாக எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை என்றும், ஆகையினால் அதில் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என்றும் உயர்ஸ்தானிகர் அவரது அறிக்கையில் வலியுறுத்த வேண்டும்." – என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாமல், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை உள்ளிட்ட ஏனைய கட்டமைப்புக்களுக்குள் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



# யாழ். மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களை மறித்து

# கல்லுண்டாயில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழி வகற்றும் வாகனங்களை மறித்து கல்லுண்டாய் பகுதி மக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாநகர சபையினரால் சேகரிக்கப்படும் கழிவுகளை மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் கொட்டுவதனை நிறுத்தும்படி கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாநகர சபை கழிவுகளை ஏற்றி வந்த உழவு இயந்திரங்கள் கல்லுண்டாய் பகுதியில் மக்களால் வழிமறிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டன.

கல்லுண்டாய் பகுதி குப்பை மேட்டில் நேற்று சனிக்கிழமை இரவு திடீரெனத் தீ பிடித்தமையால் ஏற்பட்ட புகை மண்டலத்தால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதுடன், சுவாசப் பிரச்சினையுடையவர்கள், சிறுபிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தினர் ஐம்பது வீடுகளில் இருந்து வெளியேறி நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

கல்லுண்டாய் பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதனால் அயலில் வசிக்கும் மக்கள் சுகாதாரப் பிரச்சனைகள் உள்ளிட்ட பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், நிலத்தடி நீரும் மாசடைவதால் அயல் கிராம நன்னீர் நிலைகளும் பாதிக்கப்பட்டு வருவதனால் குப்பைகளக் கொட்ட வேண்டாம் எனப் பல வருட காலமாக அந்தப் பகுதி மக்கள் கோரிக்கைகளை விடுத்து வருவதுடன் பல்வேறு சந்தர்பங்களிலும் போராட்டங்களில் ஈடுபட்ட போதிலும், அரசியல்வாதிகள், அதிகாரிகளின் வாக்குறுதிகளை நம்பி போராட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியும் வந்திருந்தனர்.

ஆனாலும், மக்களின் எதிர்ப்புக்களையும் மீறி தொடர்ந்து யாழ். மாநகர சபை, கல்லுண்டாய் பகுதியிலேயே குப்பைகளைக் கொட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# மன்னார் வடக்கு கடற்பரப்பில் எட்டு இந்திய மீனவர்கள் கைது!

இலங்கைக் கடற்படையினர், இன்று அதிகாலை மன்னாருக்கு வடக்கே இலங்கைக் கடற்பரப்பில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 8 இந்திய மீனவர்களை இந்திய மீன்பிடிப் படகு ஒன்றுடன் கைது செய்யதனர்.

நாட்டின் கடற்பரப்பை மீறி வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைளைத் தடுக்கவும், உள்ளூர் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் கடற்படை வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி, இன்று வடமத்திய கடற்படை கட்டளை மன்னாருக்கு வடக்கே இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் பலவற்றை அவதானித்ததோடு, அந்த மீன்பிடிப் படகுகளை இலங்கையில் இருந்து அகற்றும் விசேட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அங்கு இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வந்த இந்திய மீன்பிடிப் படகு ஒன்று இலங்கைக் கடற்படையினரால் முறையாகச் சோதனை செய்யப்பட்டதுடன், எல்லை விதிகளை மீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 8 இந்திய மீனவர்களை அந்த மீன்பிடி படகுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்யதனர்.

இந்த நடவடிக்கையின் போது கடற்படையினரிடம் சிக்கிய இந்திய மீன்பிடி படகும், அதில் இருந்த 8 இந்திய மீனவர்களும் தலைமன்னார் இறங்குத்துறைக்குக் கொண்டு வரப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# நாகர்கோவில் கடற்பகுதியில் படகு கவிழ்ந்ததில் மீனவர் பலி!



யாழ். வடமராட்சிக் கிழக்கு, நாகர்கோவில் கடற்பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற படகு விபத்தில் படுகாயமடைந்த மீனவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இன்று அதிகாலை நாகர்கோவில் கடற்பகுதியில் படகுகளை மேற்படி மீனவர் கழுவிக் கொண்டிருந்தார். இதன்போது அலையின் சீற்றத்தில் சிக்குண்ட படகு, அந்த மீனவருக்கு மேல் கவிழ்ந்ததில் அவர் பலத்த காயமடைந்தார்.

பருத்தித்துறை வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சுயாதீன விஜயமா?

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தமது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

அவர் இலங்கையில் சுயாதீனமாக - சுதந்திரமாக - தான் விரும்பிய இடங்களுக்கு சென்று அவற்றை பார்வையிடவும், விரும்பியவர்களைச் சந்திக்கவும் இடம் அளிக்கப்பட்டதாக இலங்கை அரசுத் தரப்பு கூறுகிறது.

தனித்து ஒரு சில பிரமுகர்களைத் தவிர, மற்றைய சந்தர்ப்பங்களில் எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பொதுத் தரப்புகளோடு சந்தித்த சமயங்களில் அவரது உரையாடல்களை கவனிக்கவும், கூர்ந்து நோக்கவும் அவரோடு சேர்ந்து வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் கூடவே இருந்தனர் என இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

வடக்கில் வடமாகாண ஆளுநரை அவர் சந்தித்த சமயம் ஆளுநரோடு வடக்கின் ஐந்து மாவட்டங்களின் அரசு அதிபர்களும் கூடப் பங்கு பற்றினர். அவர்கள் வடக்கு நிலைமையை சுயாதீனமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் எடுத்துரைத்தனரா என்று பார்த்தால் இல்லை என்றே உள்வீட்டுத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளை புலனாய்வுத் துறை போல உள்ளே வைத்துக் கொண்டு தாங்கள் எப்படி வெளிப்படையாக உண்மைகளைப் பேச முடியும் என்று இந்தச் சந்திப்பில் பங்குபற்றிய ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

இதே கேள்வியை இப்போது சர்வதேச மன்னிப்பு சபையின் பிரதிநிதி ஒருவர் எழுப்பி இருக்கிறார்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் உண்மையிலேயே சுயாதீனமானவை எனின், அவை வெளிவிவகார அமைச்சின் தலையீடு இன்றி உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கை தனியாகச் சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா என சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரண கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கடந்த செவ்வாய்க்கிழமை நீதியமைச்சு, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து பொறுப்புக்கூறலுக்கான உள்ளகப்பொறிமுறை மற்றும் நல்லிணக்க செயன்முறை குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புக் குறித்தே இப்போது இந்தக் கேள்வி எழுந்திருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சு அல்லது நீதியமைச்சு உள்ளடங்கலாக அரசாங்கத்தின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நிகழக்கூடிய சந்திப்பில், தமது கட்டமைப்புக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆதரவு குறித்தோ அல்லது போதியளவு ஆதரவு வழங்கப்படாமை குறித்தோ காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட கட்டமைப்புக்களின் அதிகாரிகளால் எவ்வாறு பிரஸ்தாபிக்க முடியும் என்றும் த்யாகி ருவன்பத்திரண எழுப்புகின்ற கேள்வி முற்றிலும் நியாயமானதுதான்.



## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)



செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அழ்வுப் பணிகளின் நான்காம் நாள் அகழ்வு இன்று இடம்பெற்றது.

இந்த மனிதப் புதைகுழியில் இதுவரை மொத்தமாக 33 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இன்றைய அகழ்வின்போது மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் உள்ள என்புத் தொகுதி ஒன்றுக்கு அருகில் ஆடை, கண்ணாடி வளையல் மற்றும் 'யுனிசெவ்' எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப் புத்தகப் பை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளுக்கு அருகில் எதுவித ஆடைகளும், பொருட்களும் மீட்கப்படாத நிலையில் இன்றைய அகழ்வின்போது என்புத் தொகுதி ஒன்றுக்கு அருகில் ஆடை, கண்ணாடி வளையல் மற்றும் 'யுனிசெவ்' எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப் புத்தகப் பை என்பன அடையாளம் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நீல நிறப் புத்தகப் பை முன்னர் வடக்கு, கிழக்கு பகுதிகளில் 'யுனிசெவ்' தொண்டு நிறுவனத்தால் நிவாரணமாகப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மனிதப் புதைகுழி அமைந்திருக்கும் இடத்தில் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்காக சட்ட வைத்திய அதிகாரிகளால் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. அதன்பிரகாரம் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்காக இன்று கொழும்பில் இருந்து ஒரு குழு வருகை தந்து மண் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது.

மேலும், செய்மதிப் படங்கள் மூலம் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சில இடங்கள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த இடங்களும் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று துப்பரவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நயாழ் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# குமுக்கன் நதியின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது பாதயாத்திரீகர் சுற்றி செல்லவேண்டிய நிலை!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தின் தென்புற எல்லையில் இருக்கக்கூடிய குமுக்கன் நதியின் நீர்மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் அந்த பகுதியில் கடற்படையினர் படகுகள் சகிதம் காவலில் நிற்கின்றனர்.

பாதயாத்திரீகர்கள் அந்த பகுதியினூடாக பயணிக்காமல் சுமார் 5 கிலோமீற்றர் தூரம் சுற்றிச் சென்று நீர் மட்டம் குறைவான இடங்களால் மறுபக்கம் கரையேற அனுமதிக்கப்படுகிறார்கள்.

குமுக்கன் காளி ஆலயத்துக்கு முன்னால் பாதயாத்திரை செல்வோர் பயணிக்க முடியாதுள்ளது.

24 மணி நேரமும் கடற் படையினர் காவல் புரிந்து வருகின்றனர்.

கதிர்காமகாம பாதயாத்திரிகர் குமுக்கன் நதியைக் கடந்து செல்வது வழமை.

# புத்தளம் சோல்ட் நிறுவன ஊழியர்களின் போராட்டத்துக்குச் சுமூக தீர்வு கிட்டியது!





(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் சோல்ட் நிறுவன ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு கோரி அதன் நிர்வாகத்திற்கு எதிராக நேற்று சனிக்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனை அறிந்த கற்பிட்டி மற்றும் புத்தளம் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஜே.எம். பைசல் மற்றும் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எஸ்.எம்.ரிகாஸ் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுடனும் புத்தளம் சோல்ட் நிறுவன நிர்வாகத்துடனும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு பிரச்சினையை சுமூகமான முறையில் தீர்த்து வைத்தனர்.

ஊழியர்களின் சம்பள உயர்வு அடுத்த மாதம் முதல் வழங்கப்படும் எனும் உறுதி மொழியை நிர்வாகத்திடம் இருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊழியர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டு வேலைக்கு திரும்பினர்.

# பராமரிப்பின்றிக் காணப்படும் நிழல்குடையால் அசௌகரியம்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பொலிஸ் நிலையத்துக்கு அருகில் காணப்படும் பஸ் நிறுத்த நிழற்குடை உரிய பராமரிப்பு இன்றிக் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த நிழற்குடை நீண்ட காலமாக எவ்வித பராமரிப்பு இன்றியும் கூரை உட்பட அதன் இருக்கைகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

அன்றாடம் தமது அடிப்படைத் தேவைகளுக்காக இந்த பஸ் நிழற்குடையை பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் பயன்படுத்துவதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பிரதான வீதியில் அக்கரைப்பற்று கல்முனை பஸ் வரும் வரை காத்திருக்கும் வேளைகளில் காகங்கள் மற்றும் பறவைகளின் எச்சங்கள், விசப்பாம்புகளின் அச்சுறுத்தலும் பொது மக்களுக்கு ஏற்படுகின்றது.

இந்த நிழற்குடை கால்நடைகள் தங்கும் இடமாகவும் மாறியுள்ளது.

இதனால் பொதுமக்கள் குறித்த நிழற்குடை உள்ள இடத்தில் இருந்து பயணம் மேற்கொள்ளுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

தற்போது அதிக வெயில் காலம் என்பதால் இதன் கூரைப்பகுதி மற்றும் நிழற்குடையின் சுற்றுச் சூழலை உடனடியாக திருத்தம் செய்து தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# சீரான மாகாண நிதி ஒழுங்கு விதிகளை உருவாக்குதல் தொடர்பிலான பயிற்சி

இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் இடையில் ஒரே சீரான மாகாண நிதி ஒழுங்கு விதிகளை உருவாக்குதல் தொடர்பான பயிற்சிப் பட்டறைத் தொடரின் 4 ஆவது அமர்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் கிளிநொச்சியிலுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆளுநருடன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசனும் நிகழ்வில் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் ஒன்பது மாகாணங்களையும் சேர்ந்த பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல், நிர்வாகம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.











# தெரு நாய்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

தெரு நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத் தீவு மாவட்டங்களில் தெருநாய்களால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பிலும், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த காலங்களில் பல்வேறு திணைக்களங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் போதியளவு முன்னேற்றம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இது தொடர்பில் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்,வடக்குமாகாணகால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் என்பன ஒருங்கிணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான செயற்றிட்டத்தை தயாரிப்பது எனவும் முதல் கட்டமாக யாழ். மாவட்டத்தில் இதனைச் செயற்படுத்துவது என்றும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர், உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.






# பட்டலந்த கொடூர வதை முகாமும் செம்மணி மனித புதை குழிகளும்!

**- நவீனன் -**

**(தமிழர் தாயகத்தை உலுக்கிய செம்மணிப் படுகொலைகள் பொய்யாகிப்போன நீதி விசாரணைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. ஈழத்தில் பல இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடூர கொலைகளுக்கு காரணமானவர்கள் யாரும் இலங்கை அரசால் கண்டுபிடிக்கப்படவில்லை.)**

முப்பது ஆண்டு கடந்துள்ள நிலையில் தமிழர் தாயகத்தை உலுக்கிய செம்மணிப் படுகொலைகள் பொய்யாகிப்போன நீதி விசாரணைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி ஒருபோதும் கிடைக்கவில்லை.

ஈழத்தில் பல இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த சம்பவம் நடைபெற்று பல ஆண்டு கடந்துள்ள நிலையில் இந்த சம்பவத்துக்குக் காரணமானவர்கள் யாரும் இலங்கை அரசால் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.


ஆனால் 1987- 1989 ஜே.வி.பி. கிளர்ச்சியினருக்கு எதிரான பட்டலந்த வதைமுகாம் கொடுமைகள், ஜே.வி.பியினர் ஆட்சியதிகாரத்துக்கு வந்ததன் பின்னர், சுமார் 37 ஆண்டுகளுக்கு முந்திய உண்மைகளை வெளிக்குக் கொண்டு வந்துள்ளனர்.

பட்டலந்த வதைமுகாமுக்கு நீதி?

ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்த பின்னரே ஜே.வி.பியினருக்கு எதிரான சட்டவிரோதக் கொடிய செயல்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால் வடக்குக் கிழக்கில் பட்டலந்தை போன்ற வதை முகாம்கள் பல இருந்தன. அரச படைகளாலும், இராணுவ துணைக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இதுவரை விசாரணைகள் எதுவும்

தொடர்ச்சி▼






# பட்டலந்த கொடூர வதை முகாமும் செம்மணி மனித புதை குழிகளும்!

தொடர்ச்சி▲

நடைபெறவில்லை.

இவற்றை ஆராய்ந்து நீதி வழங்கும் நேர்மை கடந்தகால சிங்கள அரசுகளுக்கு இருக்கவில்லை.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது ஜே.வி.பி. சகாக்கள் கொல்லப்பட்டதால் பட்டலந்த வதைகள் கொலைகளை விசாரிக்க முன்வந்தது என்பதும் உண்மையே.

### செம்மணியில் அணையா விளக்கு போராட்டம்!

ஆனால் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, புதை குழிகள் மர்மங்களையோ, விசாரணைகளயோ எந்த ஒரு சிங்கள அரசும் முன்னெடுக்கவில்லை. ஈழத்தமிழ் மக்கள் பலரது உடலங்களைத் தாங்கிய மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் தீர்வுகள் எதுவும் இதுவரை கிடையாத நிலையே உள்ளது.

இந்த விடயத்தைச் சர்வதேச பார்வைக்குக் கொண்டு செல்வதுடன் அதனூடாக உறவுகளுக்கு நீதி கிடைக்க வலியுதுத்தி மக்கள் மயப்படுத்தப்பட்ட வகையில் செம்மணியில் அணையா விளக்கு போராட்டம் 23.6.25 அன்று கொலையான கிருசாந்தியின் உறவினரால் சுடரேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த போராட்டத்தில் சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து மலர் தூவி அஞ்சலித்தனர்.

குறிப்பாக செம்மணி மண்ணில் புதையுண்டு போன உறவுகளுக்கு, நீதி வேண்டிய போராட்டமாக "அணையா விளக்கு" என்ற பெயரில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### நீதியற்ற செம்மணி புதைகுழிகள்?

தற்போது ஜுன் 23 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையில் யாழ்ப்பாணத்தின் செம்மணி வளைவுப் பகுதியில், செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டியும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அறவழிப் போராட்டத்தில் மேற்குறித்த புத்தாக்க முயற்சியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கிறார்கள்

தொடர்ச்சி▼





# பட்டலந்த கொடூர வதை முகாமும் செம்மணி மனித புதை குழிகளும்!

தொடர்ச்சி▲

எனலாம். தமிழர் இறையியல் சார்ந்த நம்பிக்கையில் விளக்கிற்கு கனதியான இடமுண்டு. இருளை நீக்கி வெளிச்சத்தை தரும் என்கிற நம்பிக்கையின் ஆன்மீக வெளிப்பாடுதான் விளக்கேற்றல். தாம் நினைத்த காரியத்திற்கு வெளிச்சம் கிடைக்க, பிறரின் பார்வை அதன் மீது பட விளக்கேற்றுவது பெருநம்பிக்கையாக இருந்து வருகின்றது.

சமநேரத்தில் விளக்கு என்ற சொல்லில் பிறருக்குத் தெரியாத விடயத்தை விளக்குதல் என்கிற அர்த்தமும் உண்டு. இந்தப் பின்னணியில் தான் தீயை வழிபட்ட மனிதன் விளக்கினைத் தன் ஆன்ம வழிபாட்டின் குறியீடாக மடைமாற்றியிருக்கிறார்கள் என்று பொருள் கொள்ளலாம்.

இதில் தமிழ் இறையியல் மரபில் அணையாத விளக்கு என்றொரு வழிபாட்டு முறையும் உண்டு. குறிப்பிட்டதொரு காலப்பரப்பை நிர்ணயித்து அக்காலம் வரைக்கும் தொடர்ச்சியாக விளக்கினை ஒளிரவிட்டால் தாம் நம்புகிற காரியம் நிகழ்தேறும் என்பதுதான் அந்நம்பிக்கையின் உட்பொருளாகும்.

உண்மையில், செம்மணி மனிதப் புதைகுழி விடயம் 1995 ஆம் ஆண்டிலிருந்து பேசப்பட்டு வருகிறது. நீதி கோரப்பட்டு வருகிறது. சர்வதேசத்தின் தலையீட்டை வலியுறுத்தி வருகின்றது. புதைத்தவரே சாட்சியமளிக்க தான் புதைத்த இடத்தை தோண்டியபோது அங்கு எந்த மனித எச்சங்களும் இல்லாதிருந்த மர்மத்தையும், எப்படித்தான் இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்கான சாட்சியத்தையும் கொண்டிராத இருள்சூழ்ந்த இடமாக செம்மணி வெளி இன்றும் நம்முன் பரந்துகிடக்கிறது. இறந்து கிடக்கிறது. எனவே இதன் மீது பலரினது வெளிச்சம் படுவதும், அதன் மீதான நியாயத்தைக் கோருவதும் அவசியமானது.

இதனை உணர்ந்துதான் என்னவோ, செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி நடத்தும் அறவழிப் போராட்டத்திற்கு "அணையா விளக்குப் போராட்டம்" எனப் பெயரிட்டிருக்கிறார்கள். அதேவேளை போராட்டம் இடம்பெறும் மூன்று தினங்களுக்கும் அணையா விளக்கை ஒளிரச்செய்யவும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

### ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதம்

நீண்டகாலமாக ஸ்ரீலங்கா அரச பயங்கரவாத நடவடிக்கைகளால் தமிழர்களுக்கு ஏற்பட்ட வதைகள், கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டதை விசாரணை நடத்தி நீதி வழங்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

தேர்தல் வெற்றிக்காகவே பேச்சளவில் இன நல்லிணக்கம், சம தருமம், தேசிய ஒற்றுமை என பறைசாற்றும் தற்போதைய அநுர அரசு தமிழர் மீதான படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என்று கேட்பதே நகைப்புக்கிடமாகும்.


தற்போது மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அநுர அரசும் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கும் என்று நம்பிக்கை கொள்ள முடியாது. ஜெனிவாவில் மனித உரிமை மீறல்களை உள்ளக விசாரணை மூலமே தீர்க்க முடியும் என்று உறுதியாக அநுர அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனியும் செம்மணி புதைகுழிகள் விவகாரத்தில் தலையிட்டு நீதி வழங்கும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

இன நல்லிணக்கம், உண்மையை கண்டறிதல் என்ற அடிப்படையில் தேர்தல் பரப்புரையில் தெரிவித்து ஆட்சியை பிடித்துள்ள இந்த அரசும் எவ்வகையிலும் தமிழ் மக்களின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது தெரிகிறது.

ஆனால் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட பட்டலந்த வதைமுகாம் பற்றிய விவகாரம் அநுரவின்

தொடர்ச்சி▼



# பட்டலந்த கொடூர வதை முகாமும் செம்மணி மனித புதை குழிகளும்!


එව බලව මෙන්න බටලන්ද

தொடர்ச்சி▲

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. நீதி விசாரணையும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

ஆனாலும் தற்போது மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அநுர அரசும் இந்த விவகாரத்தில் தலையிட்டு நீதி வழங்கும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

சர்வதேச விசாரணை கோரிக்கை

அப்பாவித் தமிழ் மக்கள் தங்களது சொந்தங்களை இழந்த உறவுகள் பலர் 35 ஆண்டுகளுக்கு பின்னரும் தங்களது உறவுகளை நினைவு கூற சிங்கள அரசுகள் அனுமதிப்பதில்லை. கடந்த பல வருடங்களாக மிகுந்த கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே தங்களது உறவுகளை நினைவு கூர்ந்து வருகின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் இருந்த எந்த அரசுகளும் விசாரணைகளை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை. எனவே இனிமேலாவது சிங்கள ஆட்சியாளர்கள் தங்களுக்கான நீதி பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா அரசை நம்புவதற்குத் தயாராக இல்லை. பரந்த நீதிப் பொறிமுறைக்கு ஊடாக தங்களுக்குச் சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட ஒரு சிறப்பு நீதிமன்றம் ஊடாக ஏற்கனவே கண்டறியப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணை ஒன்றை ஆரம்பித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வேண்டிக் கொடுப்பதுடன் இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளையும் வழங்கவேண்டும்.






# மருதமுனை அல். மதீனா வித்தியில் அனர்த்த முகாமைத்துவ ஒத்திகை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் மருதமுனை அல் –மதீனா வித்தியாலயத்தில் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வு வேலைத்திட்டம் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சி.எம். அல்தாபக ஒருங்கிணைப்புடன் பல்வேறு கட்டங்களாக பாடசாலையில் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்தது.

இதன் இறுதிக் கட்டமாகப் பாடசாலை மாணவர்கள் அனர்த்தம் ஒன்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான ஒத்திகை நிகழ்வானது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் அனுசரணை மற்றும் வலயக் கல்வி அலுவலகத்தின் மேற்பார்வையுடன் பாடசாலை அதிபர் எம்.எம்.முஹம்மட் முபீன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் போது அம்பாறை மாவட்டஅனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ் செயற்றிட்டத்தை முன்னிலைப் படுத்தி விளக்கமளித்தார்.

இதில், கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.முதர்ரிஸ், கலந்து கொண்டதுடன் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், பொலிஸ்திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழு உத்தியோகத்தர்கள், மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் உட்படபாடசாலையின்பிரதிஅதிபர்,உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கல்வி சாரா ஊழியர்களின் பலரும் கலந்து கொண்டனர்.









# கிண்ணியா நகர சபை, பிரதேச சபையின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் கௌரவிப்பு

கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் புதிய காதி நீதிவான் ஆகியோரை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு கிண்ணியா ஜமியத்துல் உலமாவின் ஏற்பாட்டில் உலமா சபையின் கேட்போர் கூடத்தில் இன்று (29) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்றது.

உலமாசபைதலைவர்கலாநிதிநஸார் லாஹி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உலமா சபையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பைத்துல் ஸகாத், பைத்துல் மால், நிர்வாகிகள் கலாநிதி ஏ.எஸ் மஹ்ரூப் , மற்றும் அதிபர்கள் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர்கள், காதி நீதிவான் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

ஒவ்வொருவரதும் எதிர்கால செயல்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என வும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாகவும், அனைவரும் இணைந்து தொழிற்படுவதால் இருக்கும் நன்மைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.









# வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த குடாநாட்டில் இருவாரங்கள் செயற்பாடு!

## கொழும்பில் இருந்து வரும் குழுவால் ஜூலை 14 இல் ஆரம்பிப்பு

யாழ். குடாநாட்டில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதியில் இருந்து தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு பரந்தளவில் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்த தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர், தென்னை பயிர்ச் செய்கை சபையின் பொது முகாமையாளர் விஜயசிங்க, தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன் உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை (27) சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

வெள்ளை ஈ தாக்கத்தால் தேங்காய் உற்பத்தி பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் திட்டத்துடனேயே வந்துள்ளதாகத் தெரிவித்த சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல், அது தொடர்பில் ஆளுநருக்கு விளக்கமளித்தார்.

அடுத்த மாதம் 14ஆம் திகதி தொடக்கம் இரு வாரங்கள் யாழ்ப்பாணத்தில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காகக் கொழும்பில் இருந்து 100 இயந்திரங்கள் (ர்பைா power water gun) கொண்டு வரப்படவுள்ளன. அத்துடன் அதை இயக்குவதற்கான ஆள்களும் அழைத்து வரப்படவுள்ளனர். அவர்களுடன் நான் உட்பட உயர் அதிகாரிகளும் இங்கு வரவுள்ளோம். இரு வாரங்களும் இங்கு தங்கியிருந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம். யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இதனை முதல் கட்டமாகச் செயற்படுத்தவுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

இதற்கான உதவிகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் தேவை எனவும் ஆளுநரிடம் கோரினார்.

இந்தத் திட்டத்தை வரவேற்ற ஆளுநர், மாகாணத்தின் சகல வளங்களையும் ஒருங்கிணைத்து முன்னெடுப்பதற்கு உரிய ஒத்துழைப்புக்கள் அனைத்தும் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்தத் திட்டத்துக்கு தேவையான ஆளணி மற்றும் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட ஏனைய வசதிகளை வழங்குவதற்கும் ஆளுநர் இணங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் யோகேஸ்வரன், யாழ்ப்பாணம் விவசாயப் பிரதி மாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.அஞ்சனாதேவி ஆகியோரும் கலந்துகொண்டனர்.







# மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று மூன்றாவது நாளாக எண்ணெய்க்காப்பு

(வாலகிருஸ்ணா)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அடியார்கள் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று மூன்றாவது தினமாகவும் நடைபெற்று வருகின்றது.

இராமபிரானால் வழிபடப்பட்ட ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே கொண்ட ஆலயம் என பல்வேறு சிறப்புகளை கொண்ட மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 02 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த 23ஆம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த நிலையில் 26 ஆம் திகதி தொடக்கம் அடியார்கள் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்றுவருகின்றது.

தற்போது நடைபெற்றுவரும் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வானது எதிர்வரும் 01ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 06மணி வரையில் நடைபெறவுள்ளது. இரவு பகலாக பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வகையிலான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை காலை ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. முற்பகல் 11.05 தொடக்கம் 11.55மணி வரையில் உள்ள ஆனி உத்தரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய கன்னி லக்ன சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

# வீதி விபத்துகளை தவிர்ப்போம்; மன்னாரில் விழிப்புணர்வு!



(வாஸ் கூஞ்ஞ)



தற்பொழுது நாட்டில் நாளாந்தம் வீதி விபத்துக்கள் அதிகரிக்கப்பட்டு வருவதால் பலர் கொல்லப்பட்டும் காயங்களுக்கு உள்ளாகியும் வருகின்றனர்.

இவற்றை கவனத்தில் கொண்ட மன்னார் உயிலங்குளத்தில் இயங்கும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் மாணவர்களின் ஏற்பாட்டில், 'வீதி விபத்துகளை தவிர்ப்போம்' எனும் தலைப்பில் ஒரு விழிப்புணர்வு தெருக்கூத்து நாடகத்தை நேற்று சனிக்கிழமை மன்னார் பஸ் நிலையத்தில் நடத்தியது.

இந்த நிகழ்வின் போது வீதி விபத்துகளுக்கான முக்கியமான காரணங்கள், அதன் தீவிர விளைவுகள் மற்றும் தடுக்கும் வழிமுறைகள் குறித்து பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த நாடகம், பாடல்களை மாணவர்கள் நிகழ்த்தினர்.

வாகனச் சாரதிகள் பாதுகாப்பு சாதனங்களைப் பயன்படுத்தும் முக்கியத்துவம், போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் அவசியம் மற்றும் அவற்றை மீறுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வு, பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகளிடையே பொறுப்பான போக்குவரத்து பழக்கங்களை வளர்க்கும் நோக்கில் ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்திருந்தது.

# மீனவர் பிரச்சினையில் கடிதம் எழுதுவதுடன் ஸ்டாலின் கடமையை முடித்துக் கொள்கிறார்

## அன்புமணி குற்றச்சாட்டு





தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது, சிறையில் அடைப்பது, தண்டம் விதிப்பது போன்ற அத்துமீறல்கள் நடப்பாண்டிலும் தொடரக் கூடாது எனவும் அதற்காக தூதரக நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"வங்கக்கடலில் மீன் பிடித்து விட்டு கரைக்கு திரும்பிக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை கச்சத்தீவு அருகே இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கை கடற்படையினரின் இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

வங்கக் கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த 2 மாதத் தடைக் காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், 16 ஆம் திகதி முதல் தான் தமிழக மீனவர்கள் வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்று வருகின்றனர். இதுவரை 4 அல்லது 5 முறை மட்டுமே அவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று வந்திருப்பார்கள் எனும் நிலையில், இருமுறை அவர்கள் மீது இலங்கை அரசின் ஆதரவுடன் இயங்கி வரும் கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தினார்கள். இப்போது தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது.

தமிழக மீனவர்களை கைது செய்வதன் மூலமும், அவர்களிடம் உள்ள பொருள்களை கொள்ளையடிப்பதன் மூலமும் அவர்களின் வாழ்வாதாரங்களை சிதைப்பது தான் இலங்கை அரசின் நோக்கம் என்பதை பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறது. கடந்த சில நாள்களில் தமிழக மீனவர்கள் மீது கடல் கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலும்,இப்போதுமேற்கொள்ளப்பட்டுள்ள கைது நடவடிக்கையும் பாமகவின் நீண்ட நாள் குற்றச்சாட்டை உறுதி செய்திருக்கிறது. இது தொடரக்கூடாது.

தமிழ்நாட்டிற்கும், இலங்கைக்கும் இடையிலான கடல் பகுதி மிகவும் குறுகலாக இருக்கும் நிலையில், தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பகுதிக்குள்ளும், இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளும் நுழைந்து மீன் பிடிப்பது தவிர்க்க முடியாதது. இத்தகைய சூழலில் இரு தரப்பு மீனவர்களும் பயனடையும் வகையில் வங்கக்கடலில் மீன் பிடிப்பதற்கான திட்டத்தை வகுப்பது தான் சரியானதாக இருக்கும். இதை மத்திய அரசு தான் செய்ய முடியும் எனும் நிலையில், அதற்கான அழுத்தத்தை தமிழக அரசு தான் தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

ஆனால், ஒவ்வொரு முறையும் மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரது கடமையை முடித்துக் கொள்கிறார். மீனவர்கள் நலனில் அவருக்கு அக்கறை இல்லை என்பதையே அவரது செயல்பாடுகள் காட்டுகின்றன.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது, சிறையில் அடைப்பது, தண்டம் விதிப்பது போன்ற அத்துமீறல்கள் நடப்பாண்டிலும் தொடரக் கூடாது. அதற்காக தூதரக நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதற்கான அழுத்தத்தை பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்துக் கொடுக்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.







# புரி ஜெகநாதர் ரத யாத்திரையில் கூட்ட நெரிசல் சிக்கி 3 பேர் பலி

## 50 பேர் காயம்

புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரை நிகழ்வில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் பலியாகினர். சுமார் 50 பேர் காயமடைந்தனர். ஸ்ரீ குந்திச்சா கோயில் அருகே இன்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஒடிசாவின் கடற்கரை நகரான புரியில் உலகப் புகழ் பெற்ற ஜெகநாதர் கோயில் அமைந்துள்ளது. புரி ஜெகந்நாதர் கோயிலுக்கு நாள் தோறும் 50,000 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருகின்றனர். அதுவும் புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரைக்காக லட்சக்கணக்கானோர் குவிவதுண்டு. வழக்கம்போல் இந்த ஆண்டும் ரத யாத்திரைக்காக புரி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

இந்நிலையில், புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரை நிகழ்வில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் பலியாகினர். சுமார் 50 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து புரி மாவட்ட ஆட்சியர் சித்தார்த் எஸ் ஸ்வெயின் கூறுகையில்,

"ரத யாத்திரையை ஒட்டி அதிகாலை 4 முதல் 4.30 மணிக்குள் ஸ்ரீ குந்திச்சா கோயில் அருகே, கூட்டம் குவிந்தது. எதிர்பாராத வகையில் கூட்டம் திரண்டதால் நெரிசலில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். இந்த நெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. கூட்ட மேலாண்மையில் ஏதேனும் குறைபாடு இருந்ததா என்ற கோணத்தில் விசாரணை நடக்கிறது." என்றார்.

இந்த விபத்து குறித்து ஒடிசா முதல்வர் சரண் மாஞ்சி வெளியிட்ட இரங்கல் செய்தியில்,

"பக்தர்கள் மத்தியில் மஹாபிரபுவையும், சாரதாபாலியையும் காண வேண்டி ஏற்பட்ட அதீத ஆர்வத்தால், துரதிர்ஷ்டவசமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்துக்காக நானும், எனது அரசாங்கமும் ஜெகநாதர் பக்தர்களிடம் மன்னிப்பு கோருகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# ட்ரம்பின் அமெரிக்க குடியுரிமை மாற்ற சட்டம்: தடை விதிக்க முடியாதென உச்சநீதிமன்றம் தீர்ப்பு

பிறப்பின் அடிப்படையில் அமெரிக்க குடியுரிமை பெறுவதில் மாற்றம் செய்து ட்ரம்ப் கையொப்பமிட்ட நிர்வாக உத்தரவுக்கு நாடு முழுவதும் விசாரணை நீதிமன்றங்கள் தடை விதிக்க முடியாது என அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அமெரிக்காவில் பிறந்த எவரும் அந்நாட்டு குடிமகன் என்பதற்கு அமெரிக்காவின் பிறப்புரிமை குடியுரிமை உத்தரவாதம் அளிக்கின்றது.

இந்தக் குடியுரிமை என்பது அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் 14 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டது.

இது பிற நாடுகளில் இருந்து உரிய சட்ட ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கும், தற்காலிகமாக அமெரிக்கா சென்றவர்களுக்கும் அந்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு அமெரிக்க குடியுரிமையைப் பெற வழிவகுத்துள்ளது.

இவ்வாறு குடியுரிமை பெறுவதில் மாற்றங்களை செய்யும் நிர்வாக உத்தரவில் கடந்த ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையொப்பமிட்டார்.

இந்தநிலையில், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளின் பெற்றோர் அந்நாட்டில் உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக இருந்தாலோ அல்லது தற்காலிகமாக தங்கியிருந்தாலோ, அந்தக் குழந்தைகளுக்கு அமெரிக்க குடியுரிமையை வழங்கக் கூடாது என தெரிவிக்கப்பட்டது.



இந்த உத்தரவு அமெரிக்க அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று பல்வேறு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், இதுதொடர்பான வழக்குகளை விசாரித்த அந்நாட்டு விசாரணை நீதிமன்றங்கள், அந்த உத்தரவை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த தடை விதித்தன.

இந்தத் தடைக்கு எதிராக அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இந்த மனுக்களை விசாரித்த ஒன்பது நீதிபதிகள் அடங்கிய அமர்வில் ஆறு நீதிபதிகள் தங்களது தீர்ப்பை அறிவித்துள்ளனர்.

இதனடிப்படையில், "நீதிமன்றத்தை அணுகுபவர்களுக்கான உத்தரவை மட்டுமே விசாரணை நீதிமன்றங்கள் பிறப்பிக்க முடியும் ஆனால், அனைவருக்கும் உத்தரவு பிறப்பித்து தங்கள் அதிகார வரம்பை தாண்டி அந்த நீதிமன்ற நீதிபதிகள் செயல்படுகின்றனர்.

இருப்பினும், ட்ரம்ப்பின் உத்தரவை 30 நாள்களுக்கு நிறுத்திவைத்த உச்ச நீதிமன்றம், அதற்குள் தங்கள் உத்தரவில்திருத்தம்மேற்கொள்ளவோ அல்லது சட்ட ரீதியாக மேல் நடவடிக்கை எடுக்கவோ விசாரணை நீதிமன்றங்களுக்கு அவகாசம் அளித்தது.

உத்தரவு சட்டப்படி செல்லுபடியாகுமா மற்றும் அமெரிக்க குடியுரிமை கிடைப்பதில் ட்ரம்ப் செய்த மாற்றம் அரசமைப்புச் சட்டப்படி செல்லுபடியாகுமா என்பது குறித்து உச்சநீதிமன்றம் எதுவும் தெரிவிக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுதொடர்பான வழக்கு நடைமுறைகள் குறித்த தீர்ப்பை மட்டுமே உச்சநீதிமன்றம் அளித்தது.

எனவே, ட்ரம்ப்பின் உத்தரவுக்கு தற்போது தடை இருந்தாலும் நீதிமன்றங்கள் மீண்டும் தலையிடாவிட்டால், அந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கான வழி தெளிவாகியுள்ளதாகவும் ஆனால், அதுதொடர்பான வழக்குகள் நீண்ட காலம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேல் மீது ஏமன் ஏவுகணைத் தாக்குதல்

இஸ்ரேல் மீது ஏமன் ஏவிய ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் வானில் இடைமறித்து சுட்டு வீழ்த்தப்பட்டன என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

காசாவுக்கு ஆதரவாக ஹூதி கிளர்ச்சியாளர் இஸ்ரேல் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஏமன் மீது பதில் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

சமீபத்தில் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த நிலையில் தற்போது ஏமனும் இஸ்ரேலும் மோதலில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 29/06/2025

## 'பவர் பாங்க்' பயன்பாடு தொடர்பில் எச்சரிக்கை

கனடாவில் சீன மின்னணு நிறுவனம் அன்கர் தயாரித்த சில பவர் பாங்க் மாடல்களை தீ அபாயம் ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 02▸



# பொதுநலவாய கற்றல் ஆளுநர் சபை கூட்டத்தில் இலங்கை பிரதமர் ஹரிணி கலந்துகொண்டார்

**கனடாவிற்கு விஜயம் மேற் கொண்டுள்ள இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரிய வான்கூவர் நகரில் நடைபெற்ற 42 ஆவது பொது நலவாய கற்றல் ஆளுநர் சபை கூட் டத்தில் கலந்துகொண்டார்.**

பொதுநலவாயம் முழுவதும் சமமான மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துவது குறித்து பொதுச்செயலாளர் ஷெர்லி அயோர்கோர் போட்ச்வே மற்றும் பொதுநலவாய கற்றல் ஆளுநர் சபை தலைவர் பேராசிரியர் பீட்டர் ஸ்காட் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இந்த கலந்துரையாடல் பயனுள்ளதாக இருந்தமை மகிழ்ச்சியை தருகிறது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பொதுநலவாய கற்றல் ஆளுநர் சபை அதிகாரிகளையும் பிரதமர் சந்தித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் பொதுநலவாய கற்றல் ஆளுநர் சபை பணிகளை மேலும் பலப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், புதிய கல்வி சீர்திருத்தம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது எனவும் இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார்.






# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலி

கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவின் ஈஸ்ட் பிடெபோர்ட் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர் கடுமையான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இரவு 8.30 மணியளவில் பர்லீ வீதி அருகே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்கள் பிரின்ஸ் கவுண்டியைச் சேர்ந்த 22 வயதுடைய பெண் மற்றும் 53 வயது டைய ஆண் என அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

மேலும், 20 வயது பெண் கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது உயிருக்கு ஆபத்தில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்தையடுத்து 163 வீதி பல மணிநேரங்கள் மூடப்பட்டது. லென்னக்ஸ் தீவுக்கு செல்லும் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டது. சனிக்கிழமை அதிகாலை 1:30 மணிக்கு பாதை மீண்டும் திறக்கப்பட்டது.

# கனடாவில் சலவை இயந்திரங்கள் தீப்பற்றும் சம்பவங்கள் பதிவு

கனடாவில் சலவை இயந்திரங்கள் மற்றும் ஆடைகளை உலர்த்தும் இயந்திரங்கள் என்பன தீப்பற்றிக் கொள்ளும் சம்பவங்கள் அதிகளவில் பதிவான தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் ஒண்டாரியோ மாகாணத்தில் உலர்த்தும் இயந்திரங்கள் மட்டுமல்லாது சலவை இயந்திரங்களும் தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஐந்து ஆண்டு காலப் பகுதியில் சலவை இயந்திரங்கள் மற்றும் ஆடை உலர்த்தும் இயந்திரங்கள் தீப்பற்றிக் கொண்ட 670 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதில் பெரும்பாலானவை ஆடை உலர்த்தும் இயந்திரங்கள் தொடர்பானவை என தெரிவிக்கப்படுகின்றது.



சலவை இயந்திர தீ விபத்து அரிதானது, ஆனால் ஏற்படலாம். அவதானமாக இருக்க வேண்டும் என டொரண்டோ தீயணைப்பு சேவையின் பொது கல்வி பிரிவு மெலிசா சிச்சொசெல்லி கூறியுள்ளார்.

## ‘பவர் பாங்க்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அளவில் இந்த பவர் பாங்குகளை மீளப்பெற்றுக்கொள்ளும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கனடிய சுகாதார முகவர் நிறுவனம் இது தொடர்பிலான எச்சரிக்கை அறிவிப்பினை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அபாயகரமான மொடல்கள்:

- Anker Power Bank - மொடல் எண் A1647 - 20,000mAh, உள்ளமைக்கப்பட்ட USB-C கேபிள்
- Anker Zolo Power Bank - மொடல் எண் A1681 - 20K, 30W, USB-C மற்றும் Lightning கேபிள்கள்
- Anker Zolo Power Bank - மொடல் எண் A1689 - 20K, 30W, USB-C கேபிள்




இந்த சாதனங்களில் உள்ள லித்தியம்-அயன் பேட்டரிகள் அதிக வெப்பம் அடைந்து தீப்பற்றும் அபாயம் இருப்பதாக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட மாடல்களை உடனடியாகப் பயன்படுத்துவதை நிறுத்தி, புதிய பதிலாக மாற்றம் அல்லது இணையதள வவுச்சர் பெற அன்கர் நிறுவனத்தை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.